<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 04.08.2026
அசல் வழக்கு எண். 300/2024
பி.சா. 1. – சந்தியா த/பெ.விஜயன் என்பவரின் வாதி தரப்பு குறுக்கு விசாரணை
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Com படித்துள்ளேன். அரிபிரசாத் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால் வெளியூரில் வேலை செய்து வருகிறார். எப்போது வெளியூருக்கு சென்றார் என்றால் 1 ½ வருடங்கள் வெளியூரில் வேலை செய்கிறார். அவ்வப்போது வந்து செல்வார். ஏன் அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் அவர் தற்போது ஊரில் இல்லை என்பதால் வரவில்லை. இவ்வழக்கில் அழைப்பாணை வாங்கியதில் இருந்து அரிபிரசாத் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று சொன்னால் அவரை நீதிமன்றத்திற்கு கூப்பிடவில்லை என்பதால் வரவில்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். அரிபிரசாத் இவ்வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க ஒப்புதல் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். ஆவணமாக எழுதி கொடுக்கவில்லை. அரிபிரசாத் நீதிமன்றத்திற்கு வரக்கூடாது என்பதற்காக நான் ஆஜர் ஆகி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்களில் தரப்பினர் அல்ல என்பதால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணப்படியாக அரிபிரசாத் ஒப்பந்தம் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உரிமையாளர் வாதி ஆனந்த லட்சுமி என்று தெரிந்துதான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.1 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது. முத்திரை தாள் யார் வாங்கினார்கள் என்றால் 1ம் பிரதிவாதி நிறுவனத்தினர் வாங்கியுள்ளார்கள். வீட்டு ஒப்பந்தம் யார் தயார் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தயார் செய்யவில்லை. பி.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் நான் செய்யவில்லை என்றால் சரிதான். அரிபிரசாத் கையெழுத்து செய்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நான் அங்கு தான் இருந்தேன். எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்தார்.
2) எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 20.11.2020 ல் எனக்கு பதிவு திருமணம் நடந்தது. 03.10.2020 என்று பி.சா.ஆ.1 முத்திரை தாளில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஏற்பட்ட போது எனக்கும் முத்து என்பவருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் நானும்

எனது கணவரும் மேற்படி ஆவணம் ஏற்பட்ட போது இல்லை என்று சொன்னால் சரியல்ல. கீதா என்பவர் யார் என்றால் 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் பிரமோட்டர் ஆவார். அவர் வாதியுடன் ஒப்பந்தம் ஏற்பட்ட போது இருந்தார். வாதி அவரிடம் பணம் கொடுக்க சொல்லி பணம் கொடுத்தேன். அவர் தற்போது எங்குள்ளார் என்றால் அவரை கடந்த 1 ½ வருடங்களாக சந்திக்க முடியவில்லை. பணத்தை கேட்டு அவர் திரும்ப கொடுக்கவில்லை. அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். நான் 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் ஒப்பந்தம் போட்ட போது 1ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே ஒப்பந்தம் உள்ளது பற்றி தெரியும் என்றால் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் போதுதான் வாதி 1ம் பிரதிவாதி தனது பில்டர் என்பதாக சொன்னார். வாதி சொல்லிதான் 1ம் பிரதிவாதிக்கு வங்கி கணக்கில் பணம் செலுத்தப்பட்டது. எந்த வங்கியில் இருந்து எந்த தேதியில் யாருடைய வங்கிக்கு பணம் அனுப்பப்பட்டது என்றால் HDFC and ICICI வங்கி UPI மூலமாக பணம் அனுப்பப்பட்டது. மேற்படி வங்கி பரிவர்த்தனை சம்பந்தமாக ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் மேற்படி ஆவணம் உள்ளது. வாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்று எனக்கு தெரியும் என்றும், அதை தெரிந்து தான் நான் 1ம் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் செய்தேன் என்றால் வாதி உரிமையாளர் என்று தெரியும் 1ம் பிரதிவாதி பற்றி தெரியாது. வாதி தான் தனது சொத்தை 1ம் பிரதிவாதி நிர்வாகம் செய்வதால் அவருடன் ஒப்பந்தம் போடுமாறு சொன்னார்.

3) என்னுடைய பதில் உரை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அப்போது அரிபிரசாத் இல்லை என்றால் சரியல்ல. இருந்தார். அரிபிரசாத் நீதிமன்றத்திற்கு அழைக்கவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது பதிலுரை தயார் செய்தபோது அரிபிரசாத் இருந்தார் என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் நீதிமன்றத்திற்கு அழைக்கவில்லை என்பதால் நான் என் அம்மாவுடன் வந்தேன். எனது பதிலுரையில் திருமணத்திற்கு பின்னர் புதிய வீடு செல்ல வேண்டும் என்பதற்காக வீடு பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பதிவு திருமணம் 1 ஆண்டிற்கு முன்பே நடந்தது. பெற்றோர் சம்மதத்துடன் திருமண ஏற்பாடு செய்தததால் வீடு பார்த்தோம். வீடு எதற்காக அரிபிரசாத் பெயரில் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் வீடு என் குடும்பத்திற்காக தான் பார்த்தது. எனக்காக மட்டுமல்ல. எனது குடும்ப உறுப்பினர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதியுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஆவணம் உள்ளதா என்றால் ஒப்பந்த ஆவணம் இல்லை.

4) பி.சா.ஆ.1ல் எனது குத்தகை தொகைக்கு 1ம் பிரதிவாதி பொறுப்பு என உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து வாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கில் நான் வாதியின் வீட்டினை காலி செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து அரிபிரசாத் கையெழுத்து என்றால் சரிதான். வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரையில் உள்ள அரிபிரசாத் கையெழுத்து மற்றும் பி.சா.ஆ.1ல் உள்ள அரிபிரசாத் கையெழுத்து வேறு மாதிரியாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் இரண்டும் அரிபிரசாத் கையெழுத்து தான். தாவா சொத்தில் அரிபிரசாத் தான் ஆரம்பத்தில் குடிவந்தார் என்றும் பின்னர் நான் தாவா சொத்திற்குள் வந்துவிட்டேன் என்றும், அரிபிரசாத் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் அவரை நீதிமன்றத்திற்கு வரவிடாமல் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு வந்ததில் இருந்து வாதிக்கு வாடகை கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பராமரிக்க நான் பராமரிப்பு தொகை கொடுத்துள்ளேனா என்றால் வாதிக்கு பராமரிப்பு தொகை கொடுத்துள்ளேன். நான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பாளராக இருந்து வருகிறேன் என்றும், நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த தொகையை பெற முடியாததால் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து காலி செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் 1ம் பிரதிவாதி எனக்கு பணம் கொடுத்தால் தான் நான் தாவா சொத்தை காலி செய்ய முடியும். தாவா சொத்தில் இருப்பதற்கு எனக்கு சட்டப்படியான ஒப்பந்தம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வாடகை கொடுக்காமல் தாவா சொத்தில் இருந்து வருவதால் வாதிக்கு நான் இழப்பீடு தொகை தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதி சொல்லிதான் 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். அவர்கள் குத்தகை பணம் ரூ.6 லட்சத்தை எனக்கு வாங்கி கொடுத்தால் அவர்கள் வாடகை பாக்கி ரூ.3 லட்சத்தை கொடுக்க நான் தயாராக உள்ளேன். எனக்கும் வாதிக்கும் சட்டப்படியான ஒப்பந்தம் இல்லை என்பதால் நான் வாதியின் சொத்தை காலி செய்து ஒப்படைக்க வேண்டும் என்றும் அதை பயன்படுத்தியதற்கான இழப்பீடு தொகையை செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledgsed by him / her to be correct.

Sd/- A.Mohamed Ali,
Additional Subordinate Judge,
Kancheepuram.